# ஒரு சொல் அல்லது தொடர் அடுக்கி வரும் முறை

அடுக்கு என்பது மீண்டும் மீண்டும் வருவதை அடிப்படையாகக் கொண்டது. அது சொல் நிலையிலும் தொடர் நிலையிலும் அமைந்து வரும்.

1. **சொல் நிலையில் அடுக்கு முறை**

**எடுத்துக்காட்டு ;**

- ஏ ஏ இஃதொத்தான் - இசைநிறை
- என்ன என்ன - அசைநிலை
- வருக வருக - பொருளோடு புணர்தல்

இசைநிறை, செய்யுளில் வரும் எனக் குறிப்பிட்டாலும், பேச்சு வழக்கிலும் வரும் என்பதை மறுத்தல் இயலாது.

**எடுத்துக்காட்டு ;**

போ, போ என் கண் முன் நில்லாதே.

**'இசைநிறை அசைநிலை பொருளோடு புணர்தலென்(று)**

**அவைமூன் றுஎன்ப ஒரு சொல் அடுக்கே' – (தொல் சொல் எச்சம் 411)**

என்ற நூற்பாவின் மூலம், சொல் அடுக்கி வருவதை அறியலாம்.

**தொடர் நிலையில் அடுக்கு முறை**

தொடர் நிலையில், வினையெச்சங்கள், வினைமுற்றுகள், வேற்றுமை உருபுகள் ஆகியன அடுக்கி வரும்.

**வினையெச்சங்கள் அடுக்கி வருதல்**

ஒரு தொடரில் பல வினையெச்சங்கள் அடுக்கி வருவதும் உண்டு. நான் ஊருக்குச் சென்று, பெற்றோரைப் பார்த்து அவர்களுடன் உரையாடி, அறுசுவை உணவு உண்டு, எனது கல்லூரி விடுதிக்குத் திரும்பி வந்தேன்.

'பன்முறை யானும் வினையெஞ்சு கிழவி

சொன்முறை முடியாது அடுக்குந வரினும்

முன்னது முடிய முடியுமுன் பொருளே' – **(தொல் சொல் வினை 233)**

**வினைமுற்றுகள் அடுக்கி வருதல்**

ஒரு தொடரில் பல வினைமுற்றுகள் அடுக்கி வந்தாலும் அவை ஒரு பெயரைக் கொண்டு முடிதல் வேண்டும் என தொல்காப்பியம் கூறுகிறது.

**எடுத்துக்காட்டு**

வந்தாள், பார்த்தாள், மகிழ்ந்தாள், மலர்க்கொடி

**'அவை தாம்**

**தம்தம் கிளவி அடுக்குந வரினும்**

**எத்திறத் தானும் பெயர்முடி பினவே – (தொல் சொல் எச்சம் 429)**

**வேற்றுமை உருபுகள் அடுக்கி வருதல்**

ஒரு தொடரில் பல உருபுகள் அடுக்கி வந்தாலும், பொருளை உணர்த்தும் வகையில் முடிக்கும் சொல்லால் அமையும்.

**எடுத்துக்காட்டு ;** பூனைக்கு கிண்ணத்தில் பாலை ஊற்றி வைத்தான்.

இத்தொடரில் முறையே நான்காம், ஏழாம், இரண்டாம் வேற்றுமை உருபுகள் வந்துள்ளன.

**அடை, சினை, முதல் அடுக்கு வருதல் – வண்ணச் சினைச் சொல்**

செங்கால் நாரை என்பது செம்மை + கால் + நாரை என பிரியும். இத்தொடரில் அடையை (பண்பைக்) குறிக்கும் **செம்மை** என்னும் சொல் முதலிலும், சினையைக் (உறுப்பைக்) குறிக்கும் சொல் இரண்டாவதாகவும், எழுவாயை குறிக்கும் சொல் மூன்றாவதாகவும் வந்துள்ளன. கரிகால் வளவன், செங்கன் செழியன், மைவிழி மாதவி என பெயர்கள் அமைந்துள்ளம்மையைக் காணலாம். வழக்கில் அழுமூஞ்சிப் பாப்பா, சுருட்டுத்தலை பையன் என வருவனவும் வண்ணச் சினைச் சொற்களே. இவ்வாறு அடை,



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

சினை, எழுவாய் (முதல்) ஆகியன மயங்காது முறையாக அடுக்கி வருவதனை

**அடைசினை முதலென முறைமூன்றும் மயங்காமை**

**நடைபெற் றியலும் வண்ணச் சினைச்சொல் – (தொல் சொல் கிழவி 26)**

என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

**ஒரு தொடரை அடிப்படையாகக் கொண்டு இடைச்செருகளும் விரித்தலும்**

ஒரு தொடரில் பெயரெச்ச, வினையெச்சங்கள், தாம் முடிக்கும் சொல்லுக்கு முன் இடையில் வேறு சொற்களும் வரலாம். இவ்வாறு வரும் சொல்லை இடைநிலை என தொல்காப்பியர் குறித்துள்ளார். மொழியியலாளர், **இடைச்செருகள்** என குறிப்பிடுகிறார்.

**பெயரெச்சத் தொடரில் இடைநிலையாக (செருகலாக) வரும் சொல்**

- ஆடிய மயில் – ஆடிய அழகான மயில் (அழகான என்பது இடைச் செருகல்)
- கிடைத்த நூல் - கிடைத்த அரிய நூல் (அறிய என்பது இடைச்செருகல்)

**வினையெச்ச தொடரில் இடைநிலையாக (செருகலாக) வரும் சொல்**

- படித்துக் கூறினான் – படித்து பொருள் கூறினான் (பொருள் என்பது இடைச்செருகல்)
- உழுது வந்தான் - உழுது ஏரோடு வந்தான் ஏரோடு என்பது இடைச் செருகல்

இக்கருத்தை பின்வரும் நூற்பா குறிப்பிடுகிறது.

‘தத்தம் எச்சமோடு சிவணும் குறிப்பின்

எச்சொல் ஆயினும் இடைநிலை வரையார் - (தொல். சொல் வினை 237)

(சிவனும் – பொருந்தும், வரையார் நீக்கார்)

‘அறத்தை அரசன் விரும்பினான்’ எனவும் ‘உண்டது பசித்த யானை’ எனவும் வரும் தொடர்களில், முறையே வேற்றுமையுருபும், முற்றுவினையும் அமைந்துள்ளன. அரசன், பசித்த என்னும் பிற சொற்கள் அவற்றோடு பொருந்தி வந்துள்ளன. இவ்வாறு பிற சொற்கள் நிற்றலை ‘இடைப்பிறவரல்’ என்பர், இதனை,

**‘உருபு முற்று ஈரெச்சம் கொள்ளும்**

**பெயர்வினை இடைப்பிற வரலுமாம் ஏற்பன’**
என நன்னூல் குறிப்பிடுகிறது.

இடைச் செருகலாக வந்த சொற்கள், பின்னாளில் பெயரடை, வினையடைகளாக தொடர்களில் அமைந்தன. சிலபோது, அடைகளாக பொருந்தி வரும் சில தொடர்களில், பொருள் மயக்கம் ஏற்படவும் வாய்ப்பு உள்ளது. **எடுத்துக்காட்டாக ; புதிய மாணாக்கர் விடுதி** என்னும் தொடரில், **மாணாக்கர்** என்னும் சொல் இடைச்செருகலாக வரும்போது, மாணாக்கர் புதியவரா, புதியதா என்பதில் பொருள் மயக்கம் ஏற்படுகிறது.

புதிய மாணாக்கர் என பொருள் கொள்ளும் போது, மாணாக்கர் புதியவர், புதிய என்னும் அடைமொழி, மாணாக்கருக்கு தாம் பொருந்தியுள்ளது. புதிய விடுதி என பொருள் கொள்ளும் போது, விடுதி தான் புதியது. புதிய என்னும் அடைமொழி, விடுதிக்குத்தான் பொருந்தியுள்ளது. ஆகவே, இவ்வாறு வரும் தொடர்களை கண்டறிந்து, பொருள் மயக்கம் என்று எழுதுதல் வேண்டும். பெயரை சிறப்பித்து வருவது, பெயரடை ,வினையைச் சிறப்பித்து வருவது, வினையடை.

**ஒரு தொடரை இருவகையாக விளக்குதல்**

குறிப்பிட்ட ஒரு தொடரை இருவகையாக விளக்குவது குறித்தும் தொல்காப்பியர், சில நூற்பாக்களில் கூறியுள்ளார்.

**எடுத்துக்காட்டு ;**

புலி கொல் யானை. இத்தொடர் இரு வகையில் பொருள் மாற்றம் உடையதாக அமையும். புலியைக் கொன்ற யானை எனவும், புலியால் கொல்லப்பட்ட யானை எனவும், இரு மாறுபட்ட பொருளைத் தருகின்றது. இங்கு வினை முதல் மாறுவதற்கு ஏற்ப, வினை வடிவம் மாறுகிறது. இதனை,

**"தடுமாறு தொழிற்பெயர்க்கு இரண்டும் மூன்றும்**

**கடிநிலை இலவே பொருள்வயி னான"** – (தொல். சொல் வேர் மயங்கியல் 95)

**தொடரில் முன் பின் மாற்றம்**

ஒரு தொடரில் வேற்றுமையுருபு முன் பின்னாக வரும். அதாவது, தொடரின் இடையிலும் வரும், இறுதியிலும் வரும்.

**எடுத்துக்காட்டு**

- உழுதான் வயலை – (தொடரின் இறுதியில் **ஐ** உருபு வந்தது)
- கணினியை இயக்கினான் – (தொடரின் இடையில் **ஐ** உருபு வந்தது)

**முக்காலத்துக்கும் பொருத்தம் உடைய வினைமுற்று**

முக்காலத்துக்கும் இருக்கும் ஒரு பொருளை விளக்கும் போது, அத்தொடரின் வினைமுற்று, செய்யும் என்னும் வாய்ப்பாட்டில் அமைதல் வேண்டும் என வினையியலில் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். **எடுத்துக்காட்டு**

- **நீர்** குளிரும்
- **மழை** நிற்கும்
- **ஞாயிறு** தோன்றும்
- **ஐப்பசி** மாதத்தில் அடை மழை பெய்யும்
- **நூலகம்** காலை ஒன்பது மணிக்கு திறக்கும்.

**பெயரையும் வினையடையும் அமைந்த தொடர்கள்;**

குதிரை ஒடியது = பெயர் + வினை

வெள்ளைக் குதிரை = பெயரடை + பெயர்

வெள்ளைக் குதிரை ஓடியது = பெயரடை + பெயர் + வினை

வெள்ளைக் குதிரை வேகமாக ஓடியது = பெயரடை + பெயர் + வினையடை + வினை